[1990 மார்ச் 23

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, அதை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(10-05 மணி)

2. தகவல் கோரல்.

(அ) அமைச்சர் பதவியை விட்டு விலகிய திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அவைக்கு விளக்கம் அளிக்க வேண்டியது குறித்து.

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 73-ன் படி இந்த அவைக்கு சில தகவல்களைப் பெறுகின்ற உரிமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே அமைச்சராக இப்போது இல்லை. அவர்கள் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். எனவே, ராஜினாமா செய்ததற்கு உரிய காரணத்தை இந்த அவையிலே வந்து சொல்ல வேண்டும் என்றும், இந்த அவையிலே வந்து சொல்வார் என்று நாங்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து, சொல்லாத காரணத்தாலே, இந்த விதிமுறையிலே மறுநாள் சொல்வதாக இருந்தால், இன்று சபாநாயகருக்கும், அவை முன்னவருக்கும் ஒரு விளக்க அறிக்கையை அவர் தந்திருப்பார், தர வேண்டும் என்று இருக்கின்ற காரணத்தாலே, விளக்க அறிக்கை இருக்கிறதா, நாளைக்காவது அவர் சொல்ல இருக்கிறாரா? ஏனென்றால் 'may' என்று சொல்கிற அந்த , சொல்லை, இங்கே எனக்கு எடுத்துச் சுட்டிக் காட்டினார்கள். 'May' he may என்று சொல்கிற அந்தச் சொல் இருக்கிற காரணத்தாலே, அவர் சொன்னாலும் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம் என்று சொல்கிற ஒரு வாதத்திற்குள் போய் விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஏன் என்றால், இதில், 'Law Lexicon—Page 800—'may' and 'shall' என்பதற்கு விளக்கம் கொடுக்கிறபோது, 'may' sometimes means 'shall' இன்னும் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். when the word 'may' மீண்டும் சொல்கிறேன். the word 'may' though primarily permissive is in certain circumstances treated as mandatory. சில சந்தர்ப்பங்களிலே அது கட்டாயமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்கிற கருத்து அங்கே இருக்கிறது. அது Treated as mandatory. It should be treated as mandatory

1990 மார்ச் 23

என்று சொல்வதற்குக் காரணம், அந்தக் குறிப்பிட்ட அமைச்சர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் ஒரு தடவை இப்படி ராஜினாமா செய்ததாக பத்திரிகையில் செய்தி வர, அப்படிஎனக்குக் கடிதமே வரவில்லை என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல, எனவே, ஏற்கெனவே ஒரு 'mist' ஒரு பனித்திரை போல இங்கே ஒன்று இருக்கிற காரணத்தாலே மீண்டும் அவர் ராஜினாமா செய்திருக்கிறார் என்று சொல்லப் பட்டு, அந்த ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அது நமது முதல்வர் அவர்களுடைய உரிமை. ஆனாலும், 'Open Government' 'Right to information' என்பதை எல்லாம் இந்தத் தேர்தல் அறிக்கையிலே சொல்லிவந்த தேசிய முன்னணி அரசின் பங்காக, அங்கமாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தாலே, நாங்கள், அவர் ஏன் ராஜினாமா செய்தார். அவர் தமிழ் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறாரா அவருக்கு உடல் நலம் சரியாக இருக்கிறதா? என்பது போன்ற விவரங்களை அறிவதற்கு உரிமை படைத்தவர்கள் என்று நாங்கள் கருதுகிற காரணத்தால், 73-வது விதிப்படி அந்த அறிக்கை வைக்கப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் 73-வது விதியின் கீழ் ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து நேற்றே திரு. வே. நா. சுப்பிரமணியம் அவர்கள் பேசி, நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் விளக்கம் அளித் திருக்கிறார்கள். என்றாலும், இந்தப் பிரச்சினை இப்போது எழுப்பப்பட்டதால், அது தொடர்பாக நான் என்னுடைய தீர்ப்பை அளிக்க விரும்புகிறேன்.

நம்முடைய உறுப்பினர் அவர்கள் 73-வது விதியின் கீழ் இதை எழுப்பி இருக்கிறார்கள். அவர் ஒரு நூலை மேற்கோள் காட்டியிருக்கிறார். நான் இப்போது "Kaul and shakdher" என்ற புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறேன்.

"The speaker of the House could not compel a Member who had resigned the Office of Minister to make a staetment in the House. ஒருவேளை உறுப்பினர்கள் வற்புறுத்தினாலும், கொடுக்க வேண்டும் என்று நாம் சொன்னாலும், அவர் அதைக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அதற்கான வாக்கியம், It was ultimately for the Member who had resigned as Minister to make or not to make such a statement. என்பது இது ஒன்று. இது தொடர்பாக நம்முடைய விதி 73-ல் கொடுக்க வேண்டும்' என்று இல்லை. 'கொடுக்கலாம்' என்று இருக்கிறது. 'வரலாம்' என்று சொன்னால், 'வராமலும் இருக் லாம்' என்று பொருள்.

10.10 மணி

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் மேற்கோளாகக் காட்டி அதையே தீர்ப்பாக வழங்குகிறேன். 'May' implies 'may not' also.

(ஆ) திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள்—போக்குவரத்துத் தொழிலாளர்களிடையே நடைபெற்ற மோதல் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் சம்பந்தமாக ஒரு பிரச்சினை எழுந்த காரணத்தினாலே, மாணவர்கள் அடிக்கப்பட்டு மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களோடு ஏற்பட்ட மோதலின் காரணமாக இந்த அளவுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன் தினம் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட அந்தப் பிரச்சினை ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கி மாணவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலை உருவாகியிருக்கிறது. நான் ஒன்றை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை உருவானதும் அங்கேயிருக்கிற காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை விரைந்து ஒரு நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால், நிச்சயமாக அந்த மோதலை ஓரளவிற்கு தவிர்த்து இருக்கலாம். ஆனால் காவல் துறை வருவதற்கு முன்னாலேயே பேருந்து தொழிலாளர்கள் தாக்கினார்கள் என்ற நிலையும், அவர்கள் தாக்கியது கூட பரவாயில்லை அதற்குப் பின்னால் காவலர்கள் வந்து தாக்கியது மிகப் பெரிய கொடுமை என்று சொல்லுகிற அளவுக்கு மாணவர்கள் தரப்பிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல தொழிலாளர்கள் தரப்பில் நாங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் வேலைகளுக்கு வேறு பாதிப்பு வருகிறது. பேருந்துகளுக்கு பாதிப்பு வருகிறது என்று தொழிலாளர்கள் தரப்பிலும் சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகள் வருகிற நேரத்தில் காவல் துறை விரைவாகவும் வேகமாகவும் பணியாற்ற வேண்டும் என்பதைச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இப்படிப்பட்ட நிலைகள் இனிமேல் உருவாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இப்போது அமைதி உருவாக வேண்டிய இந்த நேரத்தில் இது விவாதத்திற்குரிய பிரச்சினையாக ஆகாமல், இதைத் தீர்ப்பதற்கான வேண்டிய நடவடிக்கையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன்.